உ சிவமயம்
முருகன் துணை

நாச்சாத்தாள் — உலகமாயாள் தாலாட்டு

ஆக்கம்:
புலவர். பழ. முத்தப்பன்
புதுவயல்.

வெளியீடு:
சுப. சுப்பிரமணியன்
ப. இராம. ப. சு. இராம. சுப. இல்லம்
பள்ளத்தூர்.

உ

முருகன் துணை.

பதிப்புரை

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுக மொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணசலம் அமர்ந்தபெரு மாளே!

தமிழ் மொழி மாண்பையும், சைவசமய உண்மைகளையும், உலகில் போற்றி வளர்க்கும் பேறு பெற்றது செட்டிநாடு. செட்டிநாட்டு மக்கள்,

தமிழிடத்தே புலமையும் அறிவாற்றலும் பெற்றமை அவர்தம் பணிகளாலும், செயல்முறைகளாலும் தெளிவுறும். அதிலும் இன்றைய இளம் சமுதாயம் பல்கலையிலும் சிறந்து விளங்குவது மறுக்க முடியாத ஒன்று. அத்தகையர் ஆற்றல் மேலும் மேலும் வளம்பெறவும், சமுதாயத்திற்கு ஊக்கம் தரவும் இவ் வெளியீடு வெளிவருகின்றது.

தாலாட்டாகிய இந் நூலின் ஆசிரியர், திரு. பழ. முத்தப்பன் இளவயதினராயினும், சிறந்த தமிழ்ப் புலமையும், ஆர்வமும் மிக்கவர். தமிழிலே வித்துவான் பட்டமும் பெற்றவர். புதுவயல் நகரின்கண் யெ. பெரி. குடும்பத்தில் தோன்றி இன்று தமிழ்த்தொண்டாற்றி வருபவர். இந்நூலை

இயற்றி எம் எண்ணத்தைச் செயலாக்கிய தம்பி முத்தப்பன் பல்வளமும் பெற்று புகழுடைய முருகன் திருவருளை வேண்டுவதோடு, என் நன்றியையும் புலப்படுத்திக்கொள்கின்றேன்.

தாலாட்டுப் பாடல்கள் பெண்களுக்கே உரித்து என்பது நான் கூறத் தேவையில்லை. எனவே இத் தாலாட்டு நூலை பெண் மக்களில் ஒருவர் சரி பார்த்தலே சாலச் சிறப்பு என எண்ணி என் அன்பு அன்னையிடம் சேர்ப்பித்தேன். அவர்களும் ஆர்வ மிக்கு இதனை திருத்தி உதவினார்கள். என் நன்றி யுணர்வை அவர்களுக்கும் வணக்கத்தோடு தெவித்துக்கொள்கின்றேன்.

இவ் வெளியீட்டிற்கு பல்லாற்ருனும் உதவிய என் இனிய நண்பர் வலையபட்டி ந. மு. அண்ணுமலை, பார்ட்னர்,பாண்டியன் பேப்பர் கம்பெனி அவர்கள் உதவி நினைவுகூரத் தக்கது. அவர்களுக்கும் எமது நன்றி என்றும் உரிக்கும்.

இவ்வரிய பணி நிறைவேற அருள்புரிந்த எம் குலப் பெண் தெய்வங்களாம் நாச்சாத்தாள் — உலகமாயாள் இருவரின் திருவருளை மேலும், மேலும் வேண்டிப் பணிகின்றேன். இத் தாலாட்டைப் பாடி, நம் குலம் தழைக்க நற்பணி புரிவோமாக.

கீலக ௵
சித்திரை ㆍ 1௳
பள்ளத்தூர்.

இன்னணம்,
சுப. சுப்பிரமணியன்.

உ சிவமயம்
எந்தமிழ் என்றும் வாழ்க!

ஆக்கவுரை

பண்டுபுகழ் பெற்றநாடு; பார்புகழும் செட்டிநாடு; நாட்டிற்கோர் அரணில்லை. நாடாளும் வேந்தனில்லை. என்றாலும், நாடிவந்தோர் நலம் பெறுவர். தேடிவந்தோர் செல்வம் பெறுவர். நாட்டின் எல்லையோ தொன்னூற்றாறு ஊர். நாடேற்ற கொள்கையோ சைவமும் தமிழும் தழைக்க வேண்டுமென்பது, அந்நாட்டின் வீதி தோறும் சைவமணம், வீடுதோறும் தமிழ்மணம் கமழப்பெறும். வீடுகளில் நற்றமிழ் இயலாய்-இசையால், நாடகமாய் வளர்க்கப்பெறுகிறது. வீடுகளில் வளரும் தமிழுக்கு விளம்பரமுமில்லை,

காலமுமில்லை. பொதுவாகச் சொல்லப் போனல் செட்டிநாட்டு மக்கள் வாழ்வின், தொடக்கமும் இறுதியும் தமிழிலேதான் அமைகிறது. வாழ்வின் தொடக்கம் குழந்தைப் பருவம்—அங்கு தமிழ் தாலாட்டு வடிவிலே வளர்கிறது. இடையே வதுவைவிழா – அங்கு வாழ்த்துப் பாவிலே வளர்கிறது. இறுதியிலே ஒப்பாரி எனப்படும் அழுகைப் பாடலிலே மிளிர்ந்து வளர்கிறது. எனவேதான் இவர்தம் வாழ்வை இசையிலே தொடங்கி இசையிலே நிறைவுபெறுகிறது எனச் சொல்வர் தமிழறிஞர். இத்தகைய முறையில் தமிழ் வளர்க்கும் சான்ருேர்கள் முதிர்ந்த அறிவு பெற்றவரா? இல்லை கல்வியிலே பட்டந்தான் பெற்றவரா? என வினு எழுந்தால் விடை

கிடைக்காது. பட்டமும் பெற்றவரில்லை—பள்ளியிலே சென்று இம்முறையைப் பயின்றவருமில்லை. பின் எவ்வாற்றான் தாலாட்டு போன்ற கவிகள் அவர்தம் நாவிலே கழிநடம் புரிகிறது? அங்குதான் பெண்மையின் மாண்பு வெளிப்படுகிறது. ஆம்.... இத்தகைய அறிஞர்கள் பெண்மக்களே என்பது கூறாமலே வெளியாகும். அவர்தம் தாலாட்டுப் பாடலும், பிற பாடலும் இசையாலோ—இனிமை யாலோ குன்றுவதில்லை. சங்கத் தொகைப் பாடல்களின் சாயலையும் கூட அவற்றிலே காணலாம். அவையெல்லாம் எடுத்தியம்பின் அதுவே தனி நூலாகிவிடும். எனவே இத்தகைய முறையில் தமிழ் வளர்க்கும் பண்பு பண்டு பெருகி யிருந்தும்—இன்று குன்றி வருகிறது. நாகரிகம்

வளர வளர இவையெல்லாம் பழமையாய், பத்தாம் பசலியாய் ஒதுக்கப்பட்டுவருகிறது. ஆனால் இன்றைய தமிழறிஞரும், தமிழ்ப் புரவலரும் இப் பழமையைப் பாதுகாக்க, வளர்க்க நாட்டம் கொண்டு செயலாற்றி வருகின்றார்கள். அத்தகைய முறையில் கவின்பெறு நகராம் பள்ளத்தூர் நகரைச் சார்ந்தவரும், சிறந்த தெய்வச் சிந்தனையாளருமான சுப. சுப்பிரமணியன் அவர்களின் வேண்டுகோளின் படி இந்நூல் உருவாக்கப் பெற்றது. நானே சிறியோன். ஆக்கிய நூலோ பழம் புகழ்பெற்ற பெண்மக்கள் இயற்கையாக இட்டுக்கட்டிப் பாடக் கூடிய தாலாட்டு. எனவே பிழைகள் காணக் கூடும். பிழைதனை என் இளமை நோக்கித் தமிழறிஞரும், செட்டிநாட்டுத் தாய்மார்களும் பொறுத்து மன்னிக்க வேண்டுகிறேன்.

பள்ளத்தூர் வயிரவன் கோவில் தையனூர் வகுப்பைச் சார்ந்த பெருமக்கள் கூடிப் படைத்திடும் நாச்சாத்தாள் – உலகமாயாள் படைப்பின் நடை முறையைத் தாலாட்டாகப் பாடி அண்ணன் சுப்பிரமணியன் அவர்களின் ஆவலை ஒருவாற்ருன் நிறைபடுத்தியுள்ளேன். இத்தகைய ஓர் அரிய வாய்ப்பைத் தந்து இந்நூலை வெளியீடு செய்து எனை ஆக்கப்படுத்திய அன்னூருக்கு என் நன்றி என்றும் உரித்து. இத்தகைய ஆக்கப் பணியைத் தமிழிற்கு மேலும் மேலும் உளதாக்கி, எம்போன்ற தமிழ் புலவர்களை ஆதரிக்க அன்னூருக்கு நீண்ட ஆயுளும் நிறைந்த செல்வமும் கிட்டிட எல்லாம் வல்ல அங்கயற் கண்ணியின் தாள்பணிகின்றேன்.

இங்ஙனம்,

புலவர். **பழ. முத்தப்பன்**, புதுவயல்.

உ
முருகன் துணை.

நாச்சாத்தாள் — உலகமாயாள்

தாலாட்டு

காப்பு

நேரிசை வெண்பா.

வேண்டுவார் வேண்டும் வரங்களெல்லாம் தந்திடும்
மாண்புபுகழ் நாச்சாள் உலகம்மை—என்னுமிரு
பெண்தெய்வத் தாலாட்டுப் பாடி மகிழ்ந்திடவே
கண்கண்ட பிள்ளையாரே காப்பு.

தாலாட்டு

சீர்தவழும் செட்டிநாட்டில்
சிறப்பூறும் பள்ளத்தூரில்
பேர்தவழும் வயிரவரின்
பெருங்குடியாம் தையனார்

வகுப்பதனில் வந்துதித்த
வரிசைபெரு மக்களுந்தான்
தொகுப்பாகக் கூடியும்மே
தொண்டுதொட்டு நடத்திவரும்
பூலகத்து மக்களெவ்லாம்
பூரிப்பாய் பேசிவரும்
உலகத்து மக்களெல்லாம்
ஓவியமாய் பேசிவரும்
கலியுகத்து மக்களெல்லாம்
களிப்பாகப் பேசிவரும்
செழிமைமிகு செட்டிநாட்டில்
சிறப்புடனே நடந்துவரும்
நாச்சாத்தாள் உலகமாயாள்
படைப்புதனைக் கூறிடுவேன்
நான்பெற்ற செல்வமே
நயமுடனே கேட்டிடுவாய்.

படைப்பு வீடு,

ஓங்கிநிற்கும் தென்னமரம்
உயர்ந்திருக்கும் பலாமரம்
அங்கிருக்கும் அழகுக்கு
அவனியில் ஒப்பில்லை
கோவிலாய் விளங்கிநிற்கும்
குடும்பங்கள் காத்துவரும்
மாமியாரு உலகம்மை
மருமகளாம் நாச்சம்மை
மதிப்புமிகு இருவருமே
மங்கைநல்லார் இருவருமே
உதித்திட்ட நிலவாக
உவந்துநிற்பார் தெய்வமாக

படைப்போர்

அப்பெண்கள் இருவரையும்
தெய்வமென வணங்கிவரும்
தம்குடிகள் வளர்ந்திடவே
தவருது வணங்கிவரும்
தீவினைகள் நீங்குமென்று
தெண்டனிட்டு வணங்கிவரும்
குறைகளுமே நீங்குமென்று
கைகூப்பி வணங்கிவரும்
தையனூர் பிரிவுடைய
திறமைமிகு பங்காளிகள்
தம்வீட்டில் நடத்துகின்ற
காப்புக்கட்டுப் புதுமைமுதல்
தம்பிள்ளை திருமணமும்
தாம்நடத்தும் அனுவல்தோறும்

அத்தெய்வம் காத்திடவே
அன்புடனே படைத்திடுவார்
வேவுகொண்டு வந்திட்ட
மாமன்மாமி மக்களுமே
மேவிவரும் ஆச்சிதம்பி
மேன்மையான உறவினரும்
வருகவென்று அழைத்திடுவார்
வந்தவரைக் கூட்டிவைத்து
பெருவிழாவாய் நடத்திடுவார்
பெருமையாய்ப் படைத்திடுவார்.

நாச்சாத்தாள் படைப்பு

வாரஏழு நாட்களிலே
வெள்ளிசெவ்வாய் நாள்பார்த்து
தொடர்ந்துவரும் நாட்களிலே
புதன்வியாழன் நாள்பார்த்து

ஊரிலுள்ள பங்காளியை
உறவுமுறை வைத்தழைத்து
படைப்பதற்கு நாள்பார்த்து
படைப்புவீடு சென்றிடுவார்
படைப்புவீடு வளவுகளை
பட்டாலை முகப்புகளை
பங்காளிப் பெண்டுகளும்
படைப்பனுவல் பெண்டுகளும்
தாங்களே முன்னிருந்து
தரைமெழுகிச் சுத்தம்செய்வார்
பாங்குடனே வேலைசெய்வார்
பிறசாதி மக்களுமே
வேலைகளைச் செய்யாமல்
விரும்பியே பெண்டுகளும்
காலைமுதல் மாலைவரை
கடன்களையும் செய்திடுவார்

மொழுகிட்ட அறைகளிலே
மாடவிளக் கேற்றிவைத்து
கழுவிவிட்ட அறைகளிலே
கியாஸ்விளக் கேற்றிவைத்து
சுத்தம்செய்த வளவுகளில்
மின்விளக் கேற்றிவைத்து
சமையலுக்கு வேண்டுமென்ற
வேலைகளையும் செய்திடுவார்
கண்டாங்கிச் சேலைகளும்
கசங்காமல் வேலைபார்க்கும்
பெண்டுகளைப் பார்க்கும்போது
பெருவியப்பாய் இருக்குமய்யா

உணவு சமைத்தல்

குடங்களிலே தண்ணீரெடுக்க
கூட்டமாய்ச் சென்றிடுவார்

இடத்திற்கு முந்திடுவார்
இன்பமாய்ச் சென்றிடுவார்
ஊர்ச்சேதி பேசியும்மே
உறவுமுறைப் பெண்டுகளும்
வேர்க்கும்வரை வரமிளகாய்
வேகமாக அரைத்திடுவார்
கல்யாணச் சேதிபேசி
கட்டழகுக் கன்னியரும்
கல் அடுப்பு மூட்டியும்மே
காய்கறிகள் சமைத்திடுவார்
ஆண்மைமிகு ஆடவரும்
ஆர்வமிகு காளையரும்
பெண்டுகளுக்கு இணையாக
காய்கறிகள் நறுக்கிடுவார்
வீட்டுத்தோட்ட வாழைக்காயும்
வெண்ணெயாம் கத்திரிக்காயும்

நாட்டுப்பறங்கியும் குழம்புவைப்பார்
நகரப்பலாக்காயும் பொரிச்சுவைப்பார்
மரக்கறிக்காய் சமையலையும்
முடித்துவிட்டு அவர்களுந்தான்
ஒருகோழி தன்னையும்மே
ஒவியமாய்ப் பிடித்துவந்து
துள்ளிதமாய் ருசியிருக்கும்
தண்ணிக்குழம்பும் வைத்திடுவார்
நல்லமுட்டை மூன்றுவாங்கி
நயமாகப் பொறித்திடுவார்
இதனிடையில் சென்றிட்ட
ஏற்றமுள்ள ஆடவரும்
துவைத்துட்ட பட்டதனை
துள்ளிதமாய் கொண்டுவருவார்.

படைப்பு

செய்திட்ட சமையலையும்
சட்டிகளில் எடுத்துவைத்து
நெய்முதல் மோருவரை
நினைப்பாக எடுத்துவைத்து
தையனார் வகுப்புதனை
திறமுடனே காத்துவரும்
தையலவள் நாச்சாத்தாள்
தெய்வத்தை வணங்கிடவே
படைப்பதற்கு ஆயத்தம்
பெண்டுகளும் செய்திடுவார்
இவையெல்லாம் செய்திடவே
இரவுநேரம் நெருங்குமய்யா
நல்லவராம் வல்லவராம்
நம்வீட்டு ஆண்களுமே

உள்ளமெல்லாம் பக்தியோடு
    உருக்கமாய்ப் படைத்திடுவார்
உருவமாய் அமர்ந்திருக்கும்
    உயர்ந்தவளாம் நாச்சாத்தாளை
பெருவகையால் அபிடேகம்
    பக்தியாய் நடத்திடுவார்
பொன்மணியால் செய்திட்ட
    பொன் அங்கி அணிகளும்
நன்மணியால் செய்திட்ட
    நற்கழுத்தீரும் அணிவிப்பார்
கொள்ளைகொள்ளையாய்ப் பூமாலைகள்
    கொண்டுவந்து அலங்கரிப்பார்
உள்ளத்தை உருக்கிடுமே
    ஓங்கார அலங்காரம்
பேழையின் பட்டுக்களைப்
    பாய்தனில் பரப்பிடுவார்

ஓலைப்பாயில் பரப்பியிருக்கும்
பட்டிற்கும் ஒப்பில்லையாம்
மூன்றழகு வட்டிதனில்
மதிப்பாகப் பள்ளயத்தை
நன்றாக வைத்திடுவார்
நாலுவகைக் காய்கறியும்
வட்டிக்கொரு முட்டையாக
வகையான குழம்புகளும்
இட்டுவைத்து படைப்பதையும்
இப்புவியோர் அதிசயிப்பார்
பள்ளயமும் படைத்தபின்னர்
பங்காளிகள் முதலாக
உள்ளவர்கள் அனைவரையும்
உவகையோடு அழைத்திடுவார்
பிள்ளையிலாக் குறை நீங்கி
பெற்றெடுக்க வரந்தானே

எல்லோருக்கும் தருகின்ற
எம்மாத்தாள் நாச்சாத்தாளை
வணங்கியே அருள்பெறுவீர்
வருகவென்று அழைத்திடுவார்
கணப்பொழுதும் தயங்காமல்
கண் கண்ட தெய்வத்தை
வணங்கிடவே வந்திருப்போரும்
வந்துநின்று வணங்கிடுவார்
மணம்செய்த மணமக்கள்
மாதரசி குழந்தைகள்
அனைவருமே அருள்பெறவே
அன்பாக வணங்கிடுவார்
இணையில்லாப் படைப்பறையின்
முன்னாலே சென்றுநின்றால்
ஆவேசம் புகுந்துவிடும்
ஆத்தாளின் நினைவாலே

பாவேசம் எழுந்துநின்று
  பாடிடுவார் பக்தியாலே
தம்குறைகள் நீங்கிடவே
  தரும்பொருள்கள் எத்தனையோ
பொன்கொடுப்பார் பொருள்கொடுப்பார்
  புவியிலுள்ள அனைவருமே

பந்திவைத்தல்

ஆத்தாளின் திருநீறு
  அனைவரும் இட்டபின்னே
படைத்திட்ட வட்டியிலே
  பங்காளி மூன்றுபேர்
படைப்பறையில் அமர்ந்திருந்து
  பாங்காக உணவுஉண்பார்

அவருண்ட பின்னரே
அனைவருக்கும் பந்திவைப்பார்
தவறாது சுவையுள்ள
தீஞ்சுவை உணவிடுவார்
இனிப்புக்கள் இல்லெனினும்
இன்சுவையாய் உணவிடுவார்
கனிவகைகள் இல்லெனினும்
கட்டாயம் சுவையிருக்கும்
ஒருகோழி நறுக்கிவைத்து
ஓவியமாய்ச் செய்திட்ட
பெருங்குழம்பு அனைவருக்கும்
பெருமையாய் ஊற்றிடுவார்
எடுத்திட்ட முட்டைகளில்
ஒன்றெடுத்து அழகழகாய்
கடுகனுவாய் வந்தவருக்கு
கிள்ளிவைப்பார் அதிசயந்தான்

அத்துணைபேர் உண்பதுவும்
 ஒருமுட்டையின் துண்டுகளே
எத்துணைபேர் வந்தாலும்
 எடுப்பதுவோ ஒருகோழிதான்
பந்திகளும் முடிந்தபின்னர்
 பாக்குவெற்றிலை தான்கொடுப்பார்
அனுவக்காரர் முன்னிருந்து
 ஆத்தாளின் நகைகள்முதல்
அனைத்தையும் ஒழுங்குகட்டி
 அன்றைபடைப்பை முடித்திடுவார்

உலகமாயாள் படைப்பு

அடுத்தநாள் உலகம்மை
 ஆயாளின் படைப்பாகும்
படைப்பெல்லாம் நாச்சாத்தாள்
 படைப்புதான் என்றாலும்

பட்டுக்குப் பதிலாகச்
சேலைவைத்துப் படைத்திடுவார்
உருவமில்லை என்றாலும்
உள்ளன்பாய் படைத்திடுவார்
இவ்வாறு நாச்சாத்தாள்
உலகமாயாள் படைப்புகளை
இவ்விரண்டு நாள்களிலே
இனிதாக நடத்திடுவார்

சிறப்பு நிகழ்ச்சி

பேழையில் பட்டாடை
சேலைகளும் மிகுந்துவிட்டால்
வேளைதவறாது ஏலம்விட
வேண்டிடுவார் அனைவருமே
ஏலம்விடும் அழகுதனை
ஏட்டிலெழுத முடியாது

ஏலம்எடுக்க வந்திருப்போர்
    ஏற்றத்தைப் பாடமுடியாது
பட்டின்தரம் பார்ப்பதில்லை
    பாரிலுள்ள மக்களுமே
விட்டுவிட மாட்டார்கள்
    முடிந்தவரை ஏலமெடுப்பர்
பட்டெடுத்த மக்களுந்தான்
    பாரினிலே உயர்ந்திடுவார்
காட்டியே ஏலம்விட்ட
    கண்டாங்கிச் சேலைதனை
கூட்டியே வாங்கிடுவார்
    குழந்தைநலம் பெற்றிடுவார்
போட்டியிலே பட்டெடுத்தோர்
    பெண்பிள்ளை பெற்றிடுவார்
ஏலம்விட்ட பணமுந்தான்
    லெட்சலெட்சம் சேர்ந்திருக்கும்

ஏலம்விட்ட பணத்தையுமே
ஏட்டினிலே வரவுவைப்பார்
ஆத்தாளின் பெயராலே
ஆயிரமாயிரம் வந்துகுவியும்
ஆயாளின் பெயராலே
அடுக்கடுக்காய் வரவுவரும்
இவ்வாறே ஆத்தாளும்
ஏற்றமுள்ள ஆயாளும்
தம்குடியில் பெற்றிடுவார்
தரமறிந்து கொடுத்திடுவார்

விளக்கேற்றல்

எங்காத்தா வீட்டிற்கும்
எங்களாயா வீட்டிற்கும்
திங்களொரு புள்ளியாக
தினசரியே விளக்குவைப்பார்

எவ்வேலை கிடந்தாலும்
என்றுமே மறக்கமாட்டார்
அவ்வளவு பக்தியாய்
அவர்களையும் வணங்கிடுவார்.

பொங்கல்

இத்தனைக்கும் மேலாக
இவர்களுக்குப் பொங்கலுமே
மொத்தமுள்ள புள்ளிகளும்
ஒருங்கூடி வைத்திடுவார்
திருமணந்தான் நடந்திட்ட
வரிசையிலே புள்ளிகளும்
பெருநாளாம் பொங்கலையும்
முன்னின்று நடத்திடுவார்

பொங்கிலிட வேண்டிய
புள்ளிகளும் பொங்கலன்று
பொங்கற்காய் கறிகளையும்
கொண்டுவந்து அவித்திடுவார்
புள்ளிகளுக் கொருஉழக்குப்
பச்சரிசியும் வாங்கிவந்து
வெள்ளைப்பொங்கல் பொங்கிடவே
வெண்கலப்பானை ரெண்டுவைத்து
மங்கலமாய்ப் பொங்கலிட
மற்றவரும் கூடிநிற்பார்
பொங்கலிட்ட சோற்றையுமே
படைத்திட்ட பின்னருமே
வந்தவர்கள் அனைவருக்கும்
வரிசையாகக் கொடுத்திடுவார்
வந்தவரும் உண்டபின்னர்
வீடுநோக்கிச் சென்றிடுவார்

படைப்புவீட்டில் பொங்கலுமே
படைத்தபின்னே தம்வீட்டில்
படைப்புநடத்தி உண்டிடுவார்
படைத்திட்ட பொங்கலுமே
சர்க்கரைதான் ஆத்தாளுக்கு
சேராது என்பதினால்
வெற்றுப்பொங்கல் வெண்பொங்கல்
வணங்கியே உண்டிடுவார்
அடுத்தநாளாம் மாட்டுப்பொங்கல்
அறுசுவையாய் சர்க்கரைப்பொங்கல்
வீட்டினிலே பொங்கிடுவார்
தையனூர் வகுப்பினரும்
இவ்வாறு பெண்தெய்வம்
இருவரையும் வணங்கியே
இவ்வுலகில் வாழ்ந்திடுவார்
என்கண்ணே கண்வளராய்

தங்கமலரே கண்வளராய்
தரணியாள்க கண்வளராய்
எங்கள்குல விளக்கே நீ
ஏற்றம்பெற கண்வளர்வாய்

வாழ்த்து

நாச்சாத்தாள் படைப்பையும்
நயம்படவே தாலாட்டாய்
பேச்சினிலே சொல்லிட்டேன்
பெருமையாய் ஏற்றிடுவீர்
உலகமாயாள் படப்பையும்
ஓவியத் தாலாட்டாய்
பலர்புகழப் பாடிட்டேன்
பாங்குடனே கொண்டிடுவீர்

இத்தெய்வத் தாலாட்டை
என்றுமே பாடிநாம்
நம்குழந்தை தூங்கவைத்து
நலங்களுமே பெற்றிடுவோம்
செல்வங்கள் பெருகிடவே
சேர்ந்துபாடி வணங்கிடுவோம்
பல்கிப்பெருகி வாழ்ந்திடவே
பெண்தெய்வம் வணங்கிடுவோம்
வாழ்ந்திடுக நம்குடியும்
வளர்ந்திடுக புள்ளிகளும்
வாழ்ந்திடுக வயிரவரின்
தையனூர் வகுப்புதானே.

முற்றும்.